தெசலோனிக்கேயர் 1 5:16-18

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஷெஜபம் பண்ணுங்கள். (சர்வப். 18:22; கொலோ. 4:2.) சகலத்திலும் நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். ஏனெனில் சேசுக்கிறீஸ்துநாதருக்குள்ளே உங்க ளெல்லாரையும்பற்றிய தேவசித்தம் இதுவே.

சொப்போனியாஸ் ஆகமம் 3:17

உன் தேவனாகிய ஆண்டவர் வல்லுனராய் உன் நடு வீற்றிருப்பார், அவரே உன்னை இரட்சிப்பார்; உன் னைக் குறித்துச் சந்தோஷ பூரிப்புக் கொள்வார்; தமது அன்பில் நிலைத் திருப்பார், உன்னைக் குறித்துப் புகழ்கூறி மகிழ்வார் (என்பார்கள்).

பிலிப்பியர் 4:4

ஆண்டவரிடத்தில் எப்போதும் சந்தோஷமாயிருங்கள்; மறுபடியுஞ் சொல்லுகிறேன்: சந்தோஷமாயிருங்கள்.

உரோமாபுரியார் 1 12:12

நம்பிக்கையில் அகமகிழுங்கள்; துன்பத்தில் பொறுமையாயிருங்கள்; ஷெஜபத்தில் நிலைத்திருங்கள்.

சங்கீதங்கள் 94:19

சங்கீதங்கள் 118:24

ஏனென்றால், உமது கற்பனை களின் பேரிலே நான் தியானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்; உம் முடைய ஞாயப் பிரமாணங் களையே நான் ஆலோசித்துக்கொண் டிருந்தேன்.

அபாக்கூக் ஆகமம் 3:17-18

ஏனெனில், (அக்காலையில்) அத்தி புஷ்பிக்காது; திராட்சைக் கொடிகள் தளிர் கொள்ளா; ஒலீவ் மரம் கனி மோசஞ் செய்யும்; வயல் கள் தானியந் தராது; ஆடின்றி மந்தை வெறுமையாகும்; தொழுவங்களில் மாடு கன்றுகளிரா. யானோ ஆண்டவரில் சந்தோ ஷங் கொண்டாடுவேன்; என் இரட்சகராகிய தேவனின்

அக்களிப் புக் கொள்வேன்.

சங்கீதங்கள் 16:11

அவர்கள் இப்போது என்னைக் கீழே தள்ளி வளைந்துகொண்டார் கள். பூமியின்பேரில் தங்கள் கண் களைக் கவிழ்த்துக்கொள்ளத் தீர்மா னித்தார்கள்.

இராயப்பர் பொது நிருபம் 1 1:8-9

அவரை நீங்கள் காணாதிருந்தும், சிநேகிக்கிறீர்கள்; இப்போது நீங்கள் அவரைத் தரிசியாதிருந்தும், அவரை விசுவசிக்கிறீர்கள். விசுவசித்து, உங்கள் விசுவாசத்தின் கதியாகிய ஆத்தும இரட்சணியத்தை அடைவீர்களென்பதால், வாக்குக்கெட்டாத தும், மகிமை நிறைந்ததுமான சந்தோ ஷத்தால் அகமகிழுவீர்கள்.

இசாயாஸ் ஆகமம் 61:10

என் ஆண்டவரில் அடங்காச் சந்தோஷம் கொண்டாடுவேனாக; என் தேவனிடத்தில் என் ஆத்துமா அக்களிப்புக்கொள்ளும்; ஏனெனில் அவர் முடியால் சிரசலங்கரிக்கப் பட்ட மணவாளனைப்போலும், கற்களிழைத்த நகைகளால் சிங்காரிக் கப்பெற்ற மணமகனைப் போலும் எனக்கு இரட்சணியத்தின் வஸ்திரத் தைத் தரித்து, நீதியின் உடுபாவனை யால் என்னைச் சோடிப்பார்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 16:24

இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றையும் கேட்கவில்லை. கேளுங்கள், உங்கள் சந்தோஷம் பூரணமாகும்பொருட்டு பெற்றுக் கொள்வீர்கள்.

கொரிந்தியர் 2 9:7

ஆகிலும் மனவருத்தத்தோடுமல்ல, கட்டாயத்தினாலுமல்ல, அவனவன் தன் இருதயத்தில் தீர்மானித்தபடியே கொடுக்கக்கடவான். ஏனென்றால் முகமலர்ந்து கொடுக்கிறவனிடத்தில் சர்வேசுரன் பிரியப்படுகிறார். (சர்வப். 35:11.)

பழமொழியாகமம் 15:23

மனிதன் தன் வாயின் வாக்கில் சந்தோஷிக்கிறான்; காலத்துக்கேற்ற வசனமே உத்தமமாம்.

கொரிந்தியர் 2 12:10

இதனிமித்தம் எனக்கு உண்டா கும் பலவீனங்களிலும், அவமானங்க ளிலும், இக்கட்டுகளிலும், கலாபங்களி லும், நெருக்கிடைகளிலும், கிறீஸ்துவைப்பற்றி நான் பிரியப்படுகிறேன். ஏனெனில் எப்போது பலவீனப்படுகிறே னோ, அப்போது வல்லவனாயிருக்கி றேன்.

சங்கீதங்கள் 32:7

அவர் சமுத்திரத்தின் சலங் களைப் பாத்திரத்திற் சேர்ப்பதுபோற் சேர்த்து, அவைகளை பொக்கிஷத் தில் அடைப்பதுபோல பாதாளங் களில் அடைத்துவிட்டார்.

உரோமாபுரியார் 1 12:15

மகிழ்வாரோடு மகிழ்ந்து, அழுவாரோடு அழுங்கள்.

உரோமாபுரியார் 1 15:32

தேவ சித்தத்தினாலே நான் உங்களிடம் சந்தோஷமாய் வந்து உங்களோடு இளைப்பாறும்படியாகவுந்தான்.

சங்கீதங்கள் 119:111

தீமோத்தேயு 1 6:6

(உள்ளது) போதுமென்ற எண் ணத்தோடுகூடிய பக்தியே மிகுந்த ஆதாயம்.

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 11:6

விசுவாசமில்லாமல் சர்வேசுரனுக் குப் பிரியப்படவே முடியாது. ஏனெனில் சர்வேசுரனை அண்டிப் போகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பதிலளிக்கிறவ ரென்றும் விசுவசிக்கவேண்டும்.

சங்கீதங்கள் 149:4

ஏனென்றால், ஆண்டவர் தம் முடைய சனத்தின்மேலே பிரியப்பட் டிருக்கிறார்; அவர் சாந்தகுணமுள்ள வர்களை இரட்சித்து உயர்த்துவார்.

## தீமோத்தேயு 1 6:17

இப்பிரபஞ்சத்தில் ஐசுவரியராய் இருக்கிறவர்கள் ஆங்கார சிந்தை யுள்ளவர்களாய் இராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காமலும், நாம் அநுபவிப்பதற்கு வேண்டிய யாவையும் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஷஜீவனுள்ள சர்வேசுரன் பேரில் நம்பிக்கையாயிருக்கவும், (லூக். 12:21.)

## சங்கீதங்கள் 119:14

## பழமொழியாகமம் 23:24

நீதிமானின் பிதா சந்தோஷத் தால் அகமகிழ்கிறான்; ஞானியைப் பெற்றவன் அவனில் சந்தோஷிக் கிறான்.

## அர்ச். மத்தேயு சுவிசேஷம் 17:5

அவர் இன்னம் பேசிக்கொண் டிருக்கையில், இதோ பிரகாசமுள்ள ஓர் மேகம் அவர்களுக்கு நிழலிட, மேகத் தினின்று இதோ, ஓர் குரலொலி உண்டாகி: நம்முடைய நேசகுமாரன் இவரே, இவர்பேரில் நாம் பூரண பிரியமாயிருக்கிறோம். இவருக்குச் செவி கொடுங்கள் என்று சப்தித்தது. (மத். 3:17; 2 இரா . 1:17.)